BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# நகர நிர்வாகமானது உள்ளூர் அணுகுதிறன் தன்மை (accessibility) சாம்பியன்களை 2021 ஆம் ஆண்டின் அணுகுதிறன் தன்மை (accessibility) க்கான விருதுகளுக்காக அங்கீகரித்திருக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 3, 2021) – நேற்றைய தினம், தேசிய அணுகுதிறன் தன்மை வாரத்தின் (National AccessAbility Week) போது, ப்ராம்ப்ட்டன் நகரமானது 2021 ஆம் ஆண்டிற்கான அணுகுதிறன் தன்மை விருதுகளை அறிவித்திருக்கிறது. மாற்றுத்திறன் கொண்ட மக்களுக்கு அணுதிறன் தன்மைக்கான அர்ப்பணிப்பு மற்றும் அவர்களையும் உள்சேர்த்தலுக்காக அங்கீகாரம் பெற்ற தனி நபர்களும் திறுவன அமைப்புக்களும் தங்கள் செயல்பாட்டை எடுத்துக் காட்டினார்கள், மற்றும் ப்ராம்ப்ட்டன் சமுதாயம் பலனடைவதற்காக பணியாற்றுகின்றார்கள்.

இன்றைய ப்ராம்ப்ட்டன் நகரசபை கவுன்சில் கூட்டத்தின்போது பின்வரும் அணுகுதிறன் தன்மை கொண்ட சாம்பியன்கள் அங்கீகரிக்கப்பட்டனர்:

**மிஷெல் மெக்லவ்ட் (Michelle McLeod) – சமுதாய உறுப்பினர் வகைப்பாடு**

சமுதாயத்தில் அர்த்தம் நிறைந்த வகையில் ஒருங்கிணைப்பதற்கும் வாடிக்கையாளர்கள் சுய சார்பாக இருப்பதற்கும் வாடிக்கையாளர்களுக்கு பொழுதுபோக்கு, ஓய்வு மற்றும் வாழ்க்கைத் திறன்களை வளர்க்கவும் மிஷெல் (Michelle) உதவுகிறார். இந்தபெண்மணி அப்படியானவர்களுக்காக வாதிடுகிறார் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதையே நோக்கமாகவும் கொண்டுள்ளார். தடைகளை முன் கூட்டியே தடுப்பதற்கும் அகற்றுவதற்கும் மிஷெல் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்; மாற்றுத்திறனாளிகளை அரவணைக்கிறார்; மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்புக்கான ஆதரவை வழங்குகிறார்; முன்மாதிரியான வாடிக்கையாளர் சேவையை வழங்குகிறார்; மற்றும் சுதந்திரமாக வாழும் வாழ்க்கைக்கு உதவி புரிகிறார்.

**கெர்ரிஸ் ப்ளேஸ் ஆட்டிஸம் சர்வீசஸ் (Kerry's Place Autism Services) – சமுதாய நிறுவன அமைப்பு அல்லது லாப நோக்கில்லாத வகைப்பாடு**

கெர்ரிஸ் ப்ளேஸ் ஆட்டிஸம் சர்வீசஸ் (Kerry's Place Autism Services) அமைப்பானது தொடர்ந்து ப்ராம்ப்ட்டன் சமுகத்தாயத்தினருக்கான சேவைகளையும் ஆதரவையும் மேம்படுத்துகின்றது, குறிப்பாக பொழுதுபோக்கு அமைப்புகளில் பங்கேற்பதில் உள்ள தடைகளை அகற்றுவது போன்ற சேவைகள் உட்பட, உடல் அவயவ செயல் பிறழ்வுக் (ஆட்டிஸம் ஸ்பெக்ட்ரம்) கோளாறு கண்டறியப்பட்டவர்களுக்கு அணுகல் திறனை அதிகரிப்பதில் கவனம் செலுத்துகின்றது. COVID-19 தொற்றுநோய் பரவல் காலம் முழுவதிலுமாக, சமூக பங்களிப்பை பாதுகாப்பான மற்றும் அர்த்தமுள்ள வகையில் பராமரிக்க கெர்ரிஸ் ப்ளேஸ் (Kerry's Place) அமைப்பானது பல இடவசதிகளை ஏற்படுத்தியது. அந்த அமைப்பு தடைகளை முன்கூட்டியே

தடுப்பது மற்றும் அகற்றுவதில் அங்கீகாரம் பெற்றுள்ளது; குறைபாடுகள் உள்ளவர்களை தன் வசம் அரவணைக்கிறது; அணுகல் தூதராக செயல்படுகிறது; மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு ஆதரவை வழங்குகிறது; முன்மாதிரியான வாடிக்கையாளர் சேவையை வழங்குகிறது; மற்றும் சுதந்திரமாக வாழும் வாழ்க்கைக்கு உதவி வழங்குகிறது.

**CSR (பெருநிறுவனத்திற்கான சமூகப் பொறுப்பு) சொத்துடமை மேலாண்மை – ப்ராம்ப்ட்டன் வர்த்தக வகைப்பாடு**

ஃபிராங்க் காஸ்பர் என்பவர் பதிவுசெய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான சேமிப்பு திட்டங்களில் [Registered Disability Savings Plans (RDSPs)] நிபுணத்துவம் பெற்ற நிதி ஆலோசகர் ஆவார். மாற்றுத்திறனாளிகளை அரவணைத்தமைக்கும், முன்மாதிரியாக அணுகக்கூடிய வாடிக்கையாளர் சேவையை வழங்கியமைக்கும் அவர் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார். அவர் பலரையும் சந்தித்திருக்கிறார், மற்றும் விழிப்புணர்வைக் கொண்டுவருவதற்கான அமர்வுகள் நடத்தியிருக்கிறார்; மேலும் நிதி ரீதியாக நிலையான எதிர்காலத்தை உறுதிப்படுத்துகின்ற ஒரு திட்டத்தை உருவாக்கி அதை தனிப்பயனாக்கம் செய்வதற்காக அப்படிப்பட்ட ஒவ்வொரு நபருடனும் பணியாற்றுவதில் தன்னை அர்ப்பணிப்பதன் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறந்த வாய்ப்புகளை வழங்க முயற்சிக்கிறார்,

**எம்ப்ரேஸ் (EMBRACE) – மாற்றுத்திறன் தன்மைக்கான திட்ட நிகழ்ச்சிநிரல்/முனைப்பு ரீதியான வகைப்பாடு**

மிஷெல் பக்லாண்ட் என்பவர் 2010 ஆம் ஆண்டில் எம்ப்ரேஸ் (EMBRACE) எனும் அமைப்பை நிறுவினார்; தனிநபராக இருந்தபடி, தொழில்தகைமை மேம்பாடு, அணுகல்திறன் தன்மை ஒருங்கிணைப்பு மற்றும் தாக்கம் ஏற்படுத்தக்கூடிய பேச்சுத்திறன் மூலமாக தங்களின் இலக்கை அடைய மாற்றுத்திறனாளிகளுக்கு தங்களின் இயல்திறன்களையும், தங்களுக்கென பரிசாகக் கிடைத்தது போன்ற மிக சிறந்த திறன்களையும் அவர்களாகவே வெளிக்கொண்டுவர இதனை நிறுவினார். மிஷெல் என்னும் பெண்மணி ஒரு தூதராகவும் மற்றும் வழக்கறிஞராகவும் இருப்பதற்கு தன்னை அர்ப்பணித்துள்ளார்; மேலும் "வாழ்நாள் முழுவதும் கற்றலில் நமக்கு இருக்கும் வரம்புகள் என்பவை நமக்கு நாமே மனச்சாட்சியுடன் அமைத்துகொண்ட தடுப்புகள்தானே அன்றி வேறில்லை" என்பதே அவரது குறிக்கோள். தடைகளை முன்கூட்டியே தடுப்பதற்கும் அகற்றுவதற்கும் மிஷெல் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்; அரவணைக்கிறார்; மற்றும் அதே மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்புக்கான ஆதரவையும் வழங்குகிறார்.

ப்ராம்ப்ட்டன் என்பது பலகலவை கொண்ட நகரம், மற்றும் தனது பரந்து விரிந்த சமூகத்தில் உள்ள அனைவருக்கும், சமூகம் தனக்கு சொந்தம் எனும் ஒரு வலுவான உணர்வு மற்றும் அணுகல் தன்மையை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளை அடையாளம் காண்பதற்காகவே ப்ராம்ப்ட்டன் நகரம் தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட, இந்த அணுகல்தன்மைக்கான விருதுகள், அணுகல் தன்மைக்கான திறன் கொண்ட சாம்பியன்களின் சாதனைகளை எடுத்தியம்பும்; இவர்களே தடைகளை முன்கூடித் தடுத்து அகற்றுபவர்கள்; மாற்றுத்திறனாளிகளுக்கு இடமளிப்பவர்கள்; அணுகல் தூதராக செயல்படுகின்றவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு ஆதரவை வழங்குகின்றவர்கள், முன்மாதிரியாக அணுகக்கூடிய வாடிக்கையாளர் சேவையை வழங்குகின்றவர்கள், சுயசார்பான வாழ்க்கை வாழ உதவி புரிபவர்கள்; இந்த ஆண்டில் புதிய சேர்ப்பாக, அணுகக்கூடிய திட்டநிகழ்ச்சி நிரல்கள் அல்லது முன்முயற்சிகளுக்கு உதவிகளை வழங்குகின்றவர்கள்.

ப்ராம்ப்ட்டன் நகரமும் அதன் [அணுகல்தன்மை திறனுக்கான ஆலோசனைக்குழுவும் (Accessibility Advisory Committee)](#) இணைந்து, எல்லா வயதினரும், அனைத்து திறன் உள்ளவர்களும், ப்ராம்ப்ட்டனில் வாழ, வேலைசெய்ய, விளையாட, வருகை புரிய மற்றும் முதலீடு ஆகியவற்றை செய்வதற்காக ஒரே மாதிரியான வாய்ப்புகளை அனுபவிப்பதை உறுதி செய்வதில் அர்ப்பணிப்பு கொண்டுள்ளனர். நகரத்தில் அணுகல்தன்மை திறன் பற்றிய கூடுதல் தகவலுக்கு, வருகை புரியவும்: www.brampton.ca..

அணுகல்தன்மை திறனுக்கான விருதுகள் மற்றும் வெற்றியாளர்கள் பற்றி மேலும் அறிய, வருகை புரியவும்: www.brampton.ca.

**அறிஞர் கூற்றுக்கள்**

ப்ராம்ப்ட்டன் ஒரு பலகலவையிலான நகரம்; மேலும் நகரில் அணுகல் தன்மையை அதிகரிப்பதற்கும் நமது பலதரப்பட்ட சமூகத்தில், இந்த சமூகம் நம் அனைவருக்கும் சொந்தமானது என்ற வலுவான உணர்வைக் கொண்டுவரவும் தன்னை அர்ப்பணித்துள்ளது. ப்ராம்ப்ட்டனில் அணுகல் தன்மை திறன் கொண்ட சாம்பியன்களாக 2021 ஆம் ஆண்டின் விருது வென்றவர்களுக்கு நன்றி, மற்றும் அவர்களை பரிந்துரைப்பதன் மூலம் அவர்களின் முயற்சிகளை அங்கீகரித்த குடியிருப்புவாசிகளுக்கும் நன்றி. நமது நகரம் அனைவரையும் உள்ளடக்கியதாக ஆக்க ஒட்டு சமூகத்தினரின் ஆதரவும் தேவை.*"*

*- பேட்ரிக் பிரவுன், மேயர், பிராம்ப்டன் நகரம்*

ப்ராம்ப்ட்டன் நகர உறுப்பினர் மற்றும் பீல் பிரதேச அணுகல்தன்மை ஆலோசனைக் குழுக்களின் உறுப்பினர் என்ற வகையில், எங்கள் சமூகத்தை மென்மேலும் அணுகக்கூடியதாகவும், அனைவரையும் உள் சேர்ப்பதாகவும் மாற்ற ப்ராம்ப்ட்டன்வாசிகள் செய்து வரும் பணிகளைப் பற்றி நான் தொடர்ந்து பெருமைப்படுகிறேன். இந்த விருது வென்றவர்கள் அனைவரும் பன்முகத்தன்மையின் சாம்பியன்களாவர் மற்றும் அவர்களின் பணிகள் நம் நகரத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன. நாம் தொடர்ந்து ஒன்று சேர்ந்து செயல்படுவதன் மூலம், எல்லா வகை திறன் தன்மை கொண்டவர்களும் ப்ராம்ப்ட்டன் நகரத்தை இன்னும் எளிதில் அணுகக்கூடியதாக மாற்ற முடியும். "

*- பேட் ஃபோர்டினி, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 7 & 8; உறுப்பினர், ப்ராம்ப்ட்டன் நகர அணுகல் தன்மைக்கான ஆலோசனைக் குழு; உறுப்பினர், பீல் பிரதேச அணுகல்தன்மைக்கான ஆலோசனைக் குழு*

"ப்ராம்ப்ட்டன் பலகலவையான மக்கள் வாழும் நகரம், மற்றும் எல்லா வயதினரும் திறன்களும் உள்ளவர்கள் ஒரே மாதிரியான வாய்ப்புகளை அனுபவிப்பதை உறுதி செய்வதற்காக, ப்ராம்ப்ட்டன் நகரில், கவுன்சிலின் வாழ்நாள் கால முன்னுரிமை கொண்ட விஷயத்தை முன்னெடுத்துச் செல்ல நாங்கள் அர்ப்பணிப்பு கொண்டுள்ளோம். ப்ராம்ப்ட்டனில் அணுகல் தன்மையை அதிகரிப்பதற்காக எங்களுக்கு உதவி செய்து அங்கீகாரம் பெற்று 2021 அணுகல் விருது வென்றவர்களுக்கு எங்களின் நன்றி. இந்த தேசிய அணுகல் தன்மை திறன் வாரத்தில், மாற்றுத்திறனாளிகளை சேர்ப்பதற்கும் அவர்களுக்கான அணுகல்தன்மை

ஏற்படுத்திக்கொடுக்க உறுதியளித்த மக்கள், வணிகங்கள் மற்றும் அமைப்புகளை அங்கீகரிப்பதிலும் நகரம் பெருமிதம் கொள்கிறது. ”

- *டேவிட் பாரிக், தலைமை நிர்வாக அதிகாரி, பிராம்ப்டன் நகரம்*

-30-

கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 I Monika.Duggal@brampton.ca